# நுவரெலியா பிரதேச சபை
# நுவரெலியா மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 11 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நுவரெலியா பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டின் பொருட்டுப் பெறப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 3,327,048 மீளாய்வாண்டினது வருவாயாகக் கருதப்பட்டுக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான வைப்பாகிய ரூபா 1,500,000 அத் தினத்தில் உள்ளவாறான முற்பண மீதியில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வான்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் கூற்றுக்களில் காசுக் கணக்கு மீதிக்குப் பதிலாக வங்கிக் கூற்றின்படியான மீதி காட்டப்பட்டமையால் காசு மீதி ரூபா 43,737 குறைவாக நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்டது

குபோட்டா வகை டிறக்டர் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்படாதிருந்தன. அவற்றைப் பழுதுபார்த்துப் பயன்படுத்துவதற்கோ அல்லது ஏற்றவாறு கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் 20 நாட்கள் நடை பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கென பயணச் செலவினமும் சீவனப் படியுமாக வழங்கப்பட்டவற்றை விட ரூபா 70,875 மேலதிகமாக உபசரிப்புச் செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிர்வாகம்

**கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

(அ) பெகடன்வத்த நீர்த் தாங்கியை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் திட்டம் என்பவற்றிக்குப் புறம்பாக, பெரோ சீமெந்து தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி குறித்த நீர்த் தாங்கி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பெரோ சீமெந்து தொழில் நுட்பத்தின்போது பயன்படுத்தப்படாத விடயமாகிய ஷடரினுக்கு ரூபா 39,886 செலவிடப்பட்டிருந்தமை 2012 நவம்பர் 15 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையில் புலனாகியது.

(ஆ) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அங்கீகரித்த நிதியின் கீழ் மாவட்டச் செயலகத்தின் மூலம் ஏற்பாடு செய்ய்பட்ட 3 செயற்திட்டங்களுக்கு மதிப்பிடப்பட்ட மற்றும் உடன்படிக்கைக்குள்ளான Type 1000 நீர்க் குழாய்க்குப் பதிலாக Type 600 நீர்க்குழாய் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கமநெகும செயற்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது நிதியேற்பாட்டின் மூலம் அமுலாக்கப்பட்ட பிரஸ்டன் வத்த அடிப்பாதையை அமைக்கும் செயற்திட்டம் தொடர்பாக 2013 பெப்ரவரி 15 ஆந் திகதியன்று பரீசீலிக்கப்பட்டபோது, 32.37 கியூப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும் 37.44 கியூப்பிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் கொங்கிரீட் பயன்படுத்தப்பட்ட அளவு 5.13 கியூப் அதிகரித்து அதன் காரணமாக ரூபா 51,890 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை புலனாகியது.

(ஈ) 2011 ஆம் ஆண்டிற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடத்தில் 14 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கென சபைக்கு ரூபா 1,800,000 வழங்கப்பட்டிருந்தது. 2012 முடிவிலும் அதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. இவற்றுள்

நான்கு செயற்திட்டங்களுக்கு ரூபா 50,000 வீதப்படி ரூபா 200,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.6.1 க்கமைய கைவிரல் அடையாள இயந்திரத்திற்கான கூறுவிலைகளைக் கோரும் போது வடிவமைப்பு எதுவும் குறிப்பிடப்படாது கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன.

(ஆ) எட்டு மாதங்கள் தொடக்கம் 4 ஆண்டுகள் வரையிலான முற்பணக் கொடுப்பனவாகிய ரூபா 160,000 கணக்காய்வுத் தினமான 2013 மே 29 ஆந் திகதியன்றும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) 2011 ஜனவரி முதல் 2012 வரை சபையின் வருவாயாகப் பெறப்பட்ட ரூபா 92,920 பெறுமதியான 9 காசோலைகளுக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்தன. இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 188(இ) (ஈ) (ஊ) பிரிவுகளின் பிரகாரமும் 1988 பிரதேச சபைகள் (நிதி நிர்வாகம்) 31 ஆம் விதியின் பிரகாரமும் ஏற்ற நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்டரீதியான சான்றுகளது பாதுகாப்பு சம்பந்தமாக முறையான நடைமுறைகள் எதுவும் இல்லாததால் சபைக்குச் சொந்தமான நானு ஓயா டிரான்ஸ் பெஷன் காணியில் எஞ்சிய காணிக்கான வரியை அறவிடுவதற்கும் காணியை மீண்டும் பெறுவதற்குமென தொடரப்பட்ட வழக்கில் சபைக்குச் சாதகமற்ற தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. வழக்குக் கட்டணமாக ரூபா 63,480 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் சபைக்குச் சொந்தமான காணியின் உரித்தும் சபைக்கற்றதாகியது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

A/Y